# TNPSC GROUP II MAIN EXAM 2023

# PREMODEL EXAM

கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**பத்தாம் வகுப்புத் தரம்**

| | |
|---|---|
| *கால அளவு மூன்று மணி நேரம்*<br>*Time Allowed: Three Hours* | *மொத்த மதிப்பெண்கள்: 100*<br>*Maximum Marks: 100* |

---

**வினாக்களுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழில் எழுத்தில்) மட்டுமே வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions:**

- **All questions are to be attempted.**
- **The number of marks carried by a question / part is indicated against it.**
- **Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.**
- **Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.**
- **Any page or portion of the page left blank in the Question-cm-Answer Booklet must be clearly struck off.**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

**1. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. மதச்சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் திருக்குறள் என்பதை சான்று தந்து விளக்குக.
2. திருக்குறளின் கருத்துகள் அன்றாட வாழ்விற்கு எவ்வாறு துணைபுரிகிறது.
3. சமத்துவம் பற்றிய வள்ளுவர்ச் சிந்தனையை விளக்குக
4. இன்றைய சமூக அரசியல் பொருளாதார நிகழ்விற்கு திருக்குறள் எங்ஙனம் உதவுகிறது? சான்றுடன் விளக்குக.
5. "திருக்குறள் ஓர் அறநூல்" – சான்று தந்து விளக்குக.

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

**2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

காந்தியப் பொருளாதாரம் நன்னெறியை அடிப்படையாகக் கொண்டது. "ஒரு தேசத்தின் அல்லது ஒரு தனியாரின் தார்மீக ஒழுக்க நெறிகளைக் காயப்படுத்தினால் அந்த பொருளாதார நடவடிக்கை இழுக்கானது. மேலும் அனுபாவமானது" என்றும் "தார்மீக மதிப்புகளைப் புறந்தள்ளும் பொருளாதாரம் உண்மையற்றது" என்றும் கூறியுள்ளார்.

கிராமங்களில்தான் இந்தியா வாழ்வதாகக் கருதிய காந்தியடிகள் அதிக அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல், நகரமயமாதல் மற்றும் தொழில்மயமாதல் ஆகியவற்றை எதிர்த்தார். இயந்திரங்கள் 'மிகப்பெரிய பாவம்' என்று கூறிய அவர் இயந்திரங்களின் தீமைகள் குறித்து விளக்கப் புத்தகங்கள் எழுதப்பட வேண்டும்; அவற்றின் தீமைகள் குறித்து மக்களுக்கு உணர்த்தப்பட வேண்டும் ; இயந்திரங்கள் வரமல்ல ; மாறாக நமக்கு சாபம் என்று நாம் உணர வேண்டும். இயந்திரஙகள் நம் இணக்கமான வாழ்வை முடிவுக்குக் கொண்டு வந்துவிடும் என்று அறிவுறுத்தினார்.

தொழில்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தி கருதினார். நாட்டின் திறன் முழுவதையும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது எனக் கூறினார். உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய மகாத்மா உற்பத்தியானது, அநேக இடங்களில் சிறிய அளவில் அல்லது வீடுகளில் நடைபெறவேண்டும் என்று விரும்பினார். கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

கடவுள் மனிதனைப் படைத்ததின் நோக்கமே, தனக்கு தேவையான உணவை தானே நெற்றி வியர்வை சிந்தி தன் உழைப்பின் வழியால் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும் என்று உறுதிபடக் கூறினார். உணவுப் பொருள்களின் மீதான எல்லாவிதக் கட்டுப்பாடுகளையும் காந்தி எதிர்த்தார். அத்தகைய கட்டுப்பாடுகள் செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்கும் என்றார். முழுமையான மதுவிலக்கை வலியுறுத்திய காந்தியடிகள் "இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்" என்றார்.

**வினாக்கள்**

1. எவ்வகை பொருளாதாரம் உண்மையற்றது எனக் காந்தியடிகள் கூறியுள்ளார்?
2. காந்தியடிகள் விரும்பிய கிராம சர்வோதயா எப்படிப்பட்டது?
3. காந்தியடிகளின் உற்பத்தி பரவலாக்கம் குறித்து எழுதுக.
4. "இயந்திரங்கள் மிகப்பெரிய பாவம்" என்று எதற்காகக் காந்தியடிகள் கூறினார்?
5. காந்தியடிகள் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

**நலக்கொள்கை**

தன்னலக்கொள்கை என்பதும் ஒருவகை அறவியற்கொள்கை எனக் கொள்ளப்படுகிறது. எந்த ஒரு மனிதனும் தன் நலத்தைத் துறந்து பிறர் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுதல் கடினமாகும்.

மனிதன் பிறப்பிலேயே தன்னலவாதியாக இருக்கிறான்; மற்றவர் நலத்தைக் காப்பதில்கூடத் தன்னலத்தையே கருதுகிறான் என்பதும் தன்னலக்கொள்கையாகும். இதன்படி மனிதன் தன் மேன்மையை மட்டுமே கருதுகிறான்; அவன் பிறர் நலத்தைக் கருதுவதில்லை. தன்னை முழுமையாக அழித்துக்கொண்டு பிறர் நலம் பேணுவது, இயற்கைப் பொருட்களுக்குப் பொருந்தும். ஆனால் அது, மனித இனத்துக்குப் பொருந்தாது. ஒரு தானியம் தன்னை அழித்துக்கொண்டு, பல தானிய மணிகளை விளைவிக்கிறது. ஆனால் மனிதன், இழந்த உயிரை மீண்டும் பெறமுடியாது. இது தன்னலக்கொள்கையினர் கருத்தாகும்.

புத்தர், ஏசு, காந்தி போன்ற பேரறிஞர்கள் பலர் தன்னலவாதிகளாக விளங்கி இருந்தால், இன்று காணும் நல்லதொரு உலகச் சமுதாயத்தை உருவாக்கியிருக்க முடியுமா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உளவியற்கருத்துப்படி, தன்னலம் தனிமனிதனின் இயற்கை அறமாக விளங்குவது போலவே, பிறர்நலம் பேணுதலும் தனிமனிதனின் இயற்கை அறமாக விளங்குகிறது எனலாம். இந்த அடிப்படையில் நோக்கினால், தனிமனிதன் இயற்கையாகவே தன்னலம் பேணியும், பிறர்நலம் காத்தும் வாழும் இருமைக் குணமுடையவன் எனலாம். எனவே, தன்னலத்துடன் பிறர் நலமும் கருதுவதே செய்யத்தக்கதாகும் எனலாம்.

தனிமனிதன் தன்நலத்தைக் கருதாது பிறர்நலத்தையே தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதைப் பிறர்நலக்கொள்கை வலியுறுத்துகிறது. பிறர் நலக்கொள்கை தன்னையே தியாகம் செய்ய வழிவகுப்பதாகும். மற்ற தனிமனிதர்களின் நலனையே காக்கவேண்டும் என்பதும், அவ்வாறு செய்யும்போது மறந்தும்கூடத் தன்நலன் பற்றி எண்ணாமலிருப்பதும் பிறர்நலக் கொள்கையின் கருத்தாகும்.

பிறருக்குத் தொண்டு செய்யும் ஆர்வத்தில் தன் உடல்நலம் பேணாமலும், தான் செய்ய நினைத்த அளவுக்குப் பொதுநலத்தைப் பேண முடியாமலும் ஒருவனது உடல்நலம் கெட்டுத் தனக்கே பிறர் தொண்டு செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகிவிடலாம் அல்லது தன் உயிரையே தியாகம் செய்துவிடலாம்.

பிறர் நலக்கொள்கை தியாகத்தின் பெருமையைத் தெரிவிக்கிறது. பிறர்நலக் கொள்கை உடையவரின் தியாகம் என்பது, அறவாழ்வு கூறும் பல வழிகளில் ஒன்றேயன்றி, அதுவேதான் ஒரே வழி என்பதில்லை. இக்கருத்தைப் பிறர்நலக்கொள்கையினர் உணர்வதில்லை.

ஒவ்வொரு தனிமனிதனும் தன் சமுதாயத்தின் நலனையே கடமையாகக் கொள்ளவேண்டும்; சமுதாயம் வளர்ந்தால் தனிமனிதர்களும் உயர்வர் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அவன் இயங்கவேண்டும். பிறருக்குத் துன்பம் தரக்கூடாது; அனைவரும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழ வழியேற்படுத்தவேண்டும்; வெறுப்புணர்வையும் பகைமையையும் விட்டொழிக்கவேண்டும்; இன்னாமையிலும் இனிமையைக் கண்டு நல்வினையாற்றவேண்டும். இவ்வாறு செயல்படும் பொதுநன்மை பேணும் பெருமனம், பொதுநலக் கொள்கையின் சிறப்பியல்பைப் புலப்படுத்துவதாகும்.

சமுதாயநலக்கொள்கை, ஆழ்ந்த அற உணர்வின் அடிப்படையில் விரிவடையும் தன்மையைப் பெற்றுள்ளது. தான் வாழும் சமுதாயத்தின் நலன், தன் நாட்டின் நலன், அனைத்துலக நலன் மற்றும் உலகில் உள்ள எல்லா உயிரினங்களின் நலன் எனப் பொதுநலக் கொள்கை விரிந்துகொண்டேபோகும். அறவழியில் எத்தகைய குறுகிய வரையறையையும் இக்கொள்கையினர் விரும்புவதில்லை.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

## தமிழ் பக்தி இயக்கம்

பக்தி – சேவை – நம்பிக்கை – வழிபாடு – கடவுளிடம் பேரன்பு – வைதீக பிராமணிய எதிர்ப்பு – பௌத்த, சமண எதிர்ப்பு – பன்னிரு ஆழ்வார்கள் - அறுபத்து மூன்று நாயன்மார்கள் - பெண் அடியார்கள் - கிராமிய நடனங்கள் - பல்லவர் காலம் - நடனக் குழுக்களுக்கு ஆதரவு – பக்தி இயக்கப் பாடல்கள் பரப்புரை

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்ககால சோழ அரசர்களில் தலையாயவராக அறியப்படுகிறார். பட்டினப்பாலை அவருடைய ஆட்சியைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. கரிகாலனுடைய தலையாய போர் வெற்றி என்பது வெண்ணி போர்க்களத்தில் சேரரையும் பாண்டியரையும் அவர்களுக்கு உதவிய பதினோரு வேளிர் குலத் தலைவர்களையும் வெற்றி கொண்டதாகும். காட்டை வெட்டி நாடாக்கியதற்காகவும், குளம் வெட்டி வளம் பெருக்கியதற்காகவும், காவிரியில் அணை கட்டி, வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் வேளாண்மையை வளரச் செய்தார் என்பதற்காகவும் இவர் போற்றப்படுகிறார். பெருநற்கிள்ளி எனும் பெயருடைய

மற்றொரு அரசன் வேத வேள்வியான ராஜசூய யாகத்தை நடத்தியுள்ளார். கரிகாலனின் மறைவைத் தொடர்ந்து உறையூர் மற்றும் புகார் அரச குடும்பத்தினரிடையே வாரிசுரிமை தொடர்பான மோதல் ஏற்பட்டிருக்கிறது.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**6. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

V.G. Suryanarayana Sastri (1870-1903), born near Madurai, was professor of Tamil at the Madras Christian College. He was one of the earliest scholars to identify the influence of Sanskrit on Tamil, and adopted a pure Tamil name for himself Parithimar Kalignar. He was the first to argue that Tamil is a classical language, and demanded that the University of Madras should not call Tamil a vernacular language. Influenced by Western literary models, he introduced the sonnet form in Tamil. He also wrote novels and plays, and a number of essays on science. Tragically, he died at the young age of only 33.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் முதன்மை தேர்வு எழுதும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு நிதியுதவி அளித்தல் தொடர்பாக மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநருக்கு அரசு முதன்மை செயலாளர் வெளியிடும் ஆணைக் கடிதம் ஒன்றை எழுதுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. விழைந்தனர்
2. ஆவணங்கள்
3. நிலையாமை
4. பசிப்பிணி

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. கணை – கனை
2. குணி – குனி
3. திணை – தினை
4. அண்மை – அன்மை

**c. பிரித்து எழுதுக**

1. ஆயிடை
2. இடையீடின்றி
3. ஈராறாண்டு
4. உயர்வடைவோம்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்
2. வயலில் நேற்று மாடுகள் மேய்ந்தன
3. கண்ணன் படித்தான்
4. இனியன் உணவு உண்டான்

**e. பிழை நீக்கி எழுதுக**

1. அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது
2. நான் ஆற்றங்கறையில் நிற்கிறேன்
3. திருவிளாத் தேர் வந்தது.
4. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.



APPOLO STUDY CENTRE